# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்

## ஜனவரி – பிப்ரவரி 2025
## P103 – இக்காலக் கவிதையும் சிற்றிலக்கியமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. புரட்சிக் கவிஞர் என்று போற்றப்படுபவர் யார்?
2. கற்பு என்றால் என்ன?
3. கவிமணி பிறந்த ஊர் எது?
4. நாமக்கல் கவிஞர் படைத்த கவிதைகள் எத்தனை?
5. கண்ணதாசனின் சிறந்த குறுங்காவிங்கள் இரண்டினை எழுதுக.
6. ஒடுக்கப்படும் மக்களைச் சுட்டும் குறியீடாகக் கவிஞர் எந்த விலங்கைப் பாடுகிறார்?
7. சிற்பியின் கவிதைகளில் இருந்து நீங்கள் பெறும் நல்ல கருத்துகள் இரண்டினைக் கூறுக.
8. குறும்பா வடிவத்தின் ஆங்கில மூலம் எது?.
9. சிற்றிலக்கியத்தைக் குறிக்க முதன் முதலில் வழங்கப்பட்ட சொல் யாது?
10. மாரி வாயில் என்ற தூது நூலை இயற்றியவர் யார்?
11. பிள்ளைத் தமிழ் நூல்களில் இடம்பெறும் பருவங்கள் எத்தனை?
12. நாற்பொருள்கள் யாவை?
13. தஞ்சைவாணன் கோவையைப் பாடியவர் யார்?
14. அகப்பொருளுக்கு உரிய உத்திகள் இரண்டினை எழுதுக.
15. சிற்றிலக்கிய வகைகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மரபுக்கவிதை என்பதற்கு விளக்கம் தருக.
2. தமிழின் சிறப்புகளாகப் பாரதிதாசன் கூறுவன யாவை?
3. கண்ணதாசனின் கவிதை உள்ளடக்கத்தில் காணப்படும் முரண்பாடுகளுக்குக் காரணம் என்ன?
4. சுடுகாட்டு எலும்புகளைச் சோதித்த கவிஞர் கண்ட உண்மை யாது?
5. தமிழ் மொழியின் 12 பருவங்களாக எவை எவை கூறப்படுகின்றன?
6. படைவழக்கு என்றால் என்ன?
7. விக்கிரம சோழன் உலாவில் காணும் கவிதைச் சிறப்பை விளக்க ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
8. இறைமைக் குணம் என்று காரைக்காலம்மையார் எதனைக் குறிப்பிடுகிறார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) மரபுக்கவிதையும் பாடுபொருளும் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) பட்டுக்கோட்டையாரும் திரைப்படமும் என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

2. (அ) இயற்கையின் அழகைச் சொல்லோவியமாகத் தீட்டக்கூடியவர் முடியரசன் என்பதை ஆராய்க.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கிய வகைகளின் தோற்றம் குறித்து விளக்கி எழுதுக.

3. (அ) பெரிய திருமடல் கூறும் திருமாலின் பெருமைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) அக இலக்கிய உத்திகள் குறித்துக் கட்டுரை வரைக.

***